**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 316/2024**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 17.02.2026.**

| | |
|---|---|
| **Name : ப்ரியா** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused others present. ) (Accused 1, 7 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது தேங்கல்வாரையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 15.01.2024 ம் தேதி இரவு 7.15 மணி சுமாருக்கு எங்கள் வீட்டு பக்கத்தில் பவுனா என்பவர் வீட்டிற்கு நான் சென்றேன். அங்கே சண்டை நடந்து கொண்டிருந்தது. என் கணவரை பார்க்க நான் சென்றிருந்த நிலையில் சக்தி, நாகு, ரனதிவேல், சுசீந்திரன், விவேக், சௌந்தரராஜ், சக்தி மனைவி அனிதா, கோமதி ஆகியோர் இருந்த நிலையில் ரனதிவேல் என்பவர் என்கணவர் தலையில் கையால் அடித்தார்.

2) சுசீந்திரன் என் கணவரை நெஞ்சின் மீது கையால் அடித்தார். விவேக் என் கணவரை கையால் தலையில் அடித்தார். என் கணவரை காப்பாற்றிய போது சக்தி, அவர் மனைவி அனிதா, கோமதி ஆகியோர் சேர்ந்து என் தலைமுடியை பிடித்து மணிக்கட்டில் அடித்தார்கள். தெவிடியா என்று கெட்ட வார்த்தையால் எதிரிகள் அனைவரும் பேசினார்கள். அருகில் இருந்தவர்கள் பாஸ்கர், ஆனந்த், சிவக்குமார், அம்ரூஸ் ஆகியோர் தடுக்க வந்தார்கள். பாஸ்கர் என்னை மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்து 1 வாரம் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றேன். காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன்.

அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.02.18 10:47:07 +0530

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 316/2024**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 17.02.2026.**

| | |
|---|---|
| **Name : அருண்குமார்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused others present. ) (Accused 1, 7 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது தேங்கல்வாரையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் மனைவி ஆவார். கடந்த 15.01.2024 ம் தேதி இரவு 7.15 மணியிலிந்து 7.30 மணி சுமாருக்கு நான் எங்கள் அத்தை பவுனா என்பவர் வீட்டிற்கு சென்றிருந்தேன். அங்கே 10, 15 நபர்கள் இருந்தார்கள். அவரிடம் என்னெவென்று விசாரித்த போது திடீரென ரனதிவேல் என்பவர் கன்னம் மற்றும் தலையில் அடித்தார்.

2) சக்திவேல் என்பவர் என் உதட்டில் குத்தியதால் ரத்தம் வந்து இதனால் பல் உடைந்தது. பின்னால் என் தம்பி நாகேந்திரன் என்பவர் என் கழுத்தை பிடித்து கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டினார். சசீந்திரன் என்பவர் என் தலையில் கையால் அடித்தார். விவேக் என்பவர் தலையில் கையால் அடித்தார். சௌந்தர்ராஜ் என்பவர் முகம், நெஞ்சு ஆகிய பகுதிகளில் குத்தினார். என் மனைவி ப்ரியா வந்து கேட்ட போது சக்தி மற்றும் அனிதா, கோமதி ஆகியோர் தலைமுடியை பிடித்து கீழே தள்ளி அடித்தார்கள். பிறகு சத்தம் போட்டோம். அக்கம் பக்கம் உள்ள பாஸ்கர், ஆனந்த், சிவக்குமார், அம்ரூஸ் ஆகியோர் தடுக்க வந்தார்கள். பாஸ்கர் என்னையும் அ.சா.1 யும் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்து நான் 3 நாட்கள் உள்நோயாளியாக

இருந்து சிகிச்சை பெற்றேன். ஆஜர் எதிரிகள் தான் என்னை அடித்தார்கள் என்றும் இன்னும் 2 எதிரிகள் வரவில்லை என சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>** இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.02.18 10:47:13 +0530

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 316/2024**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 17.02.2026.**

| | |
|---|---|
| **Name : ஆனந்த்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused others present. ) (Accused 1, 7 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது தேங்கல்வாரையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் அண்ணி ஆவார். கடந்த 12.01.2024 ம் தேதி இரவு 7.00 மணி சுமாருக்கு நான் அந்த பகுதியில் கடைக்கு சென்ற போது அத்தை பவுனா என்பவர் வீட்டில் கூட்டமாக இருந்தது. நான் என்னவென்று பார்த்த போது அ.சா.2 யை நாகேந்திரன், ரனதிவேல், சக்தி, சௌந்தர்ராஜன், சுசீந்திரன், கோமதி, மற்ற பெண் பெயர் தெரியவில்லை ஆகியோர் அ.சா.1 யை முகத்தில் குத்தி கீழே தள்ளினார்கள். அ.சா.1 யை தலைமுடியை கோமதி மற்றும் ஒரு பெண் பிடித்து இழுத்து நெஞ்சில் குத்தினார்கள்.

2) கண்டார ஒலி, தெவிடியா என்று அ.சா.1, அ.சா.2 யை பார்த்து எதிரிகள் பேசினார்கள். நான் மற்றும் பாஸ்கர் இருவரும் அ.சா.1, 2 யை மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். ஆஜர் எதிரிகள் தான் அ.சா.1 மற்றும் அ.சா.2 யை அடித்ததாக சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.02.18 10:47:18 +0530